பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

அன்பளிப்பு

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 22 சனிக்கிழமை (06-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 41

## இளாலி-பூநகரி படகு சேவை 11ஆம் திகதிவரை நிறுத்தம்

சாவகச்சேரி, ஜன. 6

இளாலி - பூநகரி படகுச்சேவை இன்றுமுதல் 11 ஆம் திகதி வரை நடைபெறமாட்டாது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## முல்லைத்தீவுப் பகுதியில் சுப்பசொனிக் குண்டுவீச்சு

சாவகச்சேரி, ஜன. 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா வான்படை ''சுப்பசொனிக்'' விமானம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2-00 மணியளவில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியது.

திடீரென முல்லைத்தீவு வான்பரப்பில் நுழைந்த இந்த விமானம் குண்டுகளை வீசிவிட்டு உடனடியாக திரும்பியது.

சேத விவரம் இதுவரை கிடைக்கவில்லை. (இ-3)

## ஒரு தடவைக்கு மேல் இடம்பெயர்ந்த ப. நோ. கூ. சங்கங்கள் வன்னிக்கு

### முதற்கட்டமாக 6 சங்கங்கள் இடம்மாற்றம்

சாவகச்சேரி, ஜன. 6

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கும் முன்னர் இடம்பெயர்ந்து வலிகாமம்'பகுதியில் இயங்கி—

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் போது மீண்டும் இடம்பெயர்ந்த அனைத்து ப.நோ.கூ.சங்கங்களும் வன்னிப்பகுதிக்கு இடம்மாற்றப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், புங்குடுதீவு, நயினாதீவு தெல்லிப்பளை ஆகிய ப.நோ.கூ. சங்கங்கள் இவ்வாறு முதற்கட்டமாக வன்னிக்கு இடம்மாற்றப்படும்.

இந்த ப.நோ.கூ.சங்கங்களின் தலைமைக் காரியாலயம் உட்பட பெரும்பாலான கிளைகள் வன்னிப் பகுதிக்கு கொண்டு செல்லப்படும்.

வன்னிப் பகுதிக்கு இடம் மாற்றப்படும் இச்சங்களின் கிளைகள் பெருநிலப்பரப்பு முழுவதிலும் பரவலாக அமைக்கப்படும்.

தற்போது வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள மக்கள், நிவாரணப் பொருள் விநியோகங்களை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடியில் ரோந்து வந்த 8 ராணுவத்தினர் பலி!

## ஏனையோர் தப்பிஓட்டம்!! ஆயுதங்களும் மீட்பு!!!

சாவகச்சேரி, ஜனவரி 6

**மட்டக்களப்பு மியாங்குளம் சந்தி என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். கொல்லப்பட்டவர்களில் ஓர் அதிகாரியும் அடங்குவார். இச்சம்பவத்தில் ஏழு பேர் காயம் அடைந்தனர்.**

3 ஆம் கட்டை இராணுவ முகாமில் இருந்து ரோந்து வந்த இராணுவத்தினர் மீது மியாங்குளம் சந்தியில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல்,கடந்த மாதம் 5 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் மீது கரும்புலித் தாக்குதல் மேற்கொண்டு வீரச்சாவடைந்த மேஜர் ரங்கனின் 31 ஆவது நாள் நினைவாக மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது

ஒருவார காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் நடத்திய இரண்டாவது பெரிய தாக்குதல் மியாங்குளம் சந்தித் தாக்குதல் ஆகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு, பெரியகளப்பில் இடம்பெற்ற தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே. (இ-3)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

சாவகச்சேரி, ஜன. 6

மட்டக்களப்பு மியாங்குளம்சந்தி தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாட விவரம் வருமாறு:-

★ ஏ, கே. துப்பாக்கி — 7
★ செற் — 1
★ ஏ. கே. மகஸின் —20
★ நடுத்தர ரவை —65
★ கைக்குண்டு — 1

[இ-3]

## இரு பெண் போராளிகள் உட்பட மூவர் வீரச்சாவு

சாவகச்சேரி, ஜன. 6

மட்டக்களப்பு மியான்குளம் சந்தியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் இரு பெண் போராளிகள் உட்பட 3 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

பெண் போராளிகளான வீரவேங்கை நிஷாந்தினி, வீரவேங்கை ரதீபா ஆகியோருடன் 2 ஆம் லெப்டினன்ட் வாகீசனும் வீரமரணமடைந்தார். (இ-3)

## யாழ்ப்பாணத்தில் இரு படையினர் பலி

கொழும்பு, ஜன. 6

யாழ்ப்பாண நகருக்கு வடக்கே உள்ள இராணுவ காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதிக்கு மேலதிக துருப்புக்கள் அனுப்பப்பட்டன என்றும் —

(6ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து வந்த படையினர் தாக்குதலுக்கு உள்ளாகினர்

சாவகச்சேரி, ஜன. 6

நேற்று முன்தினம் யாழ். நகரப்பகுதியில், தட்டாதெருச் சந்தியில் இருந்து ஒட்டுமடம் சந்தி நோக்கி ரோந்து வந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சிவசேனையின் ஆதரவுக்கு நன்றி; இந்து சமயப் பேரவை மகஜர்

சாவகச்சேரி, ஜன. 6

ஸ்ரீலங்கா இராணுவத்தை உடனடியாக யாழ்பாணத்தில்இருந்து விலக்கி எமது மக்கள் சுதந்திரத்துடனும் சுயமரியாதையுடனும் தமது வீடுகளுக்கு திரும்பவும்—

ஈழத் தமிழர்கள் அனைவரும் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் தம் தாயகப் பூமியில் வாழ்வதற்கும் —

வழி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய மத்திய அரசு மூலம் அழுத்தம் கொடுக்க ஆவன செய்யவும்.

இந்து சமயப் பேரவை, கடந்த வாரம் சிவசேனைத் தலைவர் திரு. பால் தக்கரேக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு கோரியுள்ளது.

நல்லை திருஞானசம்பந்த ஆதின குருமகா சந்நிதானம், இந்துமதகுரு பீடாதிபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பழைய புளியங்குளத்தில் 6 பேர் வீரச்சாவு

கடந்த-முதலாம் திகதி புத்தளம் அநுராதபுரம் வீதியில் உள்ள பழைய புளியங்குளம் பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலில் 6 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

2 ஆம் லெப்டினன்ட் கதிரவன் [மரியாம்பிள்ளை சிஸஸ் ஸ்ரீபன் — மன்னார்),

வீரவேங்கை சாந்தன் (இராசலிங்கம் இராசேந்திரன் — நீர்வேலி),

வீரவேங்கை அப்பன் (பஞ் [illegible] வாய் வடக்கு)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சக்தி வாய்ந்த கடல் கண்ணி மட்டுநகரில் படையினர் மீட்பு

சாவகச்சேரி, ஜன. 6

மட்டக்களப்பு வாவியில் மிதந்த கடல் கண்ணி வெடி ஒன்று படையினரால் கண்டுபிடிக்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது

சத்துருக் கொண்டானுக்கு அருகாமையில் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாவியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த படகு ஒன்றே இதைக் கண்டுபிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இது வெடித்திருந்தால் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கும் என படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3]

## பருத்தித்துறைக்குகப்பல்கள் இனி தாமதித்தே வரும்

சாவகச்சேரி, ஜன. 6

யாழ்ப்பாண மக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் தெற்கில் இருந்து பருத்தித்துறைக்கு இப்போதைக்கு எந்தக் கப்பலும் வரமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை ஏற்றிவரும் பணியில் ஈடுபடும் கப்பல்களில் ''லங்காகல்யாணி'' கப்பல் தவிர்ந்த ஏனைய கப்பல்கள் யாவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க் குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரி யில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு நாளை 7 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவ ணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

★ Jane Benette — 729, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் ணம்.

★ சிவகுமாரன் கிருபாபதி — 99/A, சந்தன மாதா ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ சரஸ்வதி நகுலேந்திரன் — கரப்பிட்டி பிள் யார் கோவிலடி, அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

★ நாகமணி வைரவநாதன் — அராலி தெற்கு, வட்டுக்கோட்டை (நாகமல் கோவில் அருகில்).

★ எஸ். கிருஷ்ணசாமி மங்கையர்க்கரசி — 19, சந்தனமாதா கோயில் வீதி. அரியாலை.

★ தோமஸ் கிறிஸ்ரி — 27, சவச்சாலை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

★ திருமதி சிவபாக்கியம் கந்தசாமி — இலகுடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ வ. மாணிக்கலிங்கம் — 392/01 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ மு. சுவேந்திரராஜன் — ஆனைகோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ திருமதி சா. பன்னீர்ச்செல்வம் — இல 5, 4 ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம்-

★ ந. கருணாகரன்—நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

★ திருமதி ச. ஏரம்பு—39, பாரதி வீதி, கச்சேரி-நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

★ திரு, செல்லையா இராசரத்தினம்—சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ திரு. க. ரகுநாதன் — 23/1, முதலியார் லேன், நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்

★ கி. அல்வீனாஸ் மரியம்மா-சுவி — சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.

★ க. யேசுதாசன் பேபிஆண் — 823, ஆஸ்பத் திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ ந. சுப்பிரமணியம் J. P — ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

★ பொ. நடராசா —கோகிலா வீதி, கோண்டா வில் வடக்கு, கோண்டாவில்.

★ செ. தவராசா — கோகிலா வீதி, கோண்டா வில் வடக்கு, கோண்டாவில்.

★ சின்னையா பொன்னையா (தம்புமணி) — நாகர் கோவில் கிழக்கு.

★ கந்தையா தர்மகுலசிங்கம் — மே/பா ரி. அரு ளானந்தம் பங்கவேல் வீதி, மீசாலை, சாவகச்சேரி.

★ வீரகத்தி பொன்னம்பலம் — மே/பா என். தங்கவேலாயுதம் 5 ஆம் முகாம், நாகர்கோவில் வடக்கு

★ நாகம்மா சின்னையா — மே/பா கே. செல் லையா மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

★ திருமதி. நடனனேஸ்வரி மகேந்திரராசா — 326, 5 ஆம் யூனிட், இராமநாதபுரம், கிளிநொச்சி

★ அரியபுத்திரன் பகிரதன் — மே/பா தண்டா யுதபாணி, 413, 5 ஆம் யூனிட், இராமநாதபுரம், கிளிநொச்சி.

★ பொன்னுத்துரை உதயராசா அல்லது சரஸ் வதி பொன்னுத்துரை — 12, கனகபுரம், கிளிநொச்சி.

★ நேசம்மா செல்வராசா — 4 ஆம் வட்டாரம் மண்டைதீவு.

★ திருமதி ஜப்பான் சம்மாட்டி—40, பாக்றோட் குருநகர், யாழ்ப்பாணம்.

★ கணபதி தங்கராசா—புது சிவன் கோயில் வீதி, சங்கானை.

★ விமலாதேவி இராசதுரை — அராலி வீதி சங்கானை.

★ நாகம்மா வன்னியசிங்கம் அல்லது சசி — மணற்புலம், அளவெட்டி.

★ சின்னத்துரை கார்த்திகேசு — சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

★ சின்னராசா அந்தோனியாப்பிள்ளை — கடற் கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

★ கனகரெத்தினம் மகாதேவன் — மே/பா செல்லத்துரை மாஸ்டர், மெய்கண்டான், மட்டுவில் கிழக்கு, மட்டுவில்.

★ திருமதி சகுந்தலாதேவி யசோதரன் — மட்டு வில் தெற்கு, சாவகச்சேரி.

★ பொன்னையா சின்னையா — ஊரியான் அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

★ திருமதி பிரான்சிஸ் பிளசம் (Blossom) மே/பா M. P. ஸ்ரீபன் (லென்ரகன் கிராமசேவகர்) செம்பியன் பற்று வடக்கு, செம்பியன்பற்று.

★ செல்லையா மார்க்கண்டு — நாகர்கோவில் வடக்கு, நாகர்கோவில்.

## யாழ். இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம்

பழைய மாணவர் சங்கம்

அவசர நிர்வாக சபைக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் அவசர நிர்வாக சபைக்கூட் டம் இன்று (6 -1 -96) காலை 10-00 மணிக்கு சாவகச் சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தவ றாது சமூகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள் கின்றேன்.

செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
யாழ். இந்துக் கல்லூரி.

(சி-3019)

## மலரும் மலர்கள் வீடியோ சேவை

82, சிவப்பிரகாசம் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்போது பின்வரும் முகவரியில் இயங்குகின்றது:

★ மலரும் மலர்கள் வீடியோ சேவை ★

28, டச்சு வீதி,
சாவகச்சேரி.

மயிலன் வெதுப்பகம்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(39918)

## அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் இயங்கிவந்த

### கமல் பல்பொருள் விற்பனை மாடம்

தற்போது யாழ் வீதி, [கண்டி வீதி] கிளிநொச்சியில் இயங்கிவருவதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

★ மலசலகூட மாபில் வகை யாவும் ★ பெயின்ட் ★ கட்டடப் பொருள்கள்
★ சிமெந்து ★ குழாய்க்கிணறுப் பம் ★ எஸ்லோன் பைப் வகை
★ பிலைவூட் பலகை யாவும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கமல் பல்பொருள் விற்பனை மாடம்
யாழ் வீதி, [கந்தசாமி கோவில் அருகாமையில்] கிளிநொச்சி.

(C/3020)

## 3ஆம் ஆண்டில் தேடிக் கலங்குகிறோம்



உதிப்பு: 09 — 06 — 1974

ஒழிப்பு: 06 — 01 — 1993

### கந்தையா பிறேமதாசன்

(பிறேமன்)

பிறேமா! எங்கு நீ மறைந்தாய்
தேடிக் கலங்குகிறோம் உன் சின்னச்
சிரிப்பைக் காண விழி வழி தேடுதடா
தடுமாறாதெம் நா நிதம் உன் பெயர் சொல்லி
எழிலான உன்முகம் காண ஏங்கித் தவிக்குதடா
வாராயோ ஒரு நாள்தானும் ஒருவார்த்தை பேசிவிட
ஊமையாய் ஊர்வலமாய் நீ போன காட்சியினை
ஊர்பார்க்க எம் உறவுகள் பார்க்க — புக்காரா
பரீட்சித்த ''ரொக்கற்றால்'' நீ படுத்தாய்.
சித்தங்கேணியில் ''சுப்பசோனிக்'' தீயதினால்
பத்தோடு பத்தாக நீ போன திசையினை
எண்ணிக் கலங்குகிறோம், இனி எப்ப வருவாயோ?
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

— குடும்பத்தினர்

அன்று
நன்னீர்,
பெற்றோல் நிலைய ஒழுங்கை,
காங்கேசன்துறை.

இன்று
''அமுதசுரபி''
2 ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(40060)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் அதிகமுள்ள இடங்களில்

# முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்

கொழும்பு, ஜன. 6

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட உள்ளூராட்சி சபைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவிருக்கிறது.

மேற்கண்ட தகவலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் துணைத்தலைவர் மருதூர்க்கனி தெரிவித்தார்.

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டிராத உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் செய்து கொள்ளப்படும் உடன்பாட்டின் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்தபர்.

(இ-3)

# கைதான பத்துப்பேர் வவுனியாவில் தடுத்துவைப்பு

கடந்த நவம்பர் 29 ஆம் திகதி கிளாலி கடல் நீரேரி ஊடாக செல்கையில் படையினரால் பிடித்துச் செல்லப் பட்டதாகக் கூறப்படும் பத்துப் பேர் வவுனியா ஜோசப் முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்துப் பேரையும் முகாமுக்குச் சென்று சந்தித்ததாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

நா. பாஸ்கரன், இ. இன்ப சுதாகரன், இ. இதயன், இ. இன்பன், ந. சுரேஸ், அ. ஆனந்தன், அ. சதீஸ், அ. ஜெயபாலன் மற்றும் கார் உரிமையாளர் ஒருவரும் அவரது உதவியாளரும் (உ-9)

## 'டயரி'க்கு அலையும் மக்கள்

இந்த ஆண்டுக்கான டயறிகள் இன்னமும் தென்மராட்சிப் பகுதியில் விற்பனைக்கு வரவில்லை இதனால் பலர் டயறிகள் தேடி கடை கடையாக அலைவதைக் காண முடிகிறது. (இ-117)

# சேறும், சகதியுமாக கிளிநொச்சிச் சந்தை

கிளிநொச்சி, ஜன. 6

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த சில நாள்களாகப் பெய்த மழையினால், இங்குள்ள பொதுச்சந்தை சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

இடம்பெயர்ந்து வந்து வசிக்கும் மக்கள், வியாபாரிகளால் கிளிநொச்சிச் சந்தை நிரம்பி வழிகிறது.

சந்தை சேறும் சகதியுமாக இருப்பதால் பாவனையாளர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டி உள்ளது.

சந்தைப் பகுதியில் தேங்கும் தண்ணீர் வழிந்தோட கால்வாய்களை அமைப்பதில் சம்பந்தப்பட்ட பகுதியினர் கவனம் செலுத்தவேண்டும் ஏன்று மக்கள் தெரிவிக்கின்றனா. (அ-76)

## மார்ச் மாதம் தேர்தல்

கொழும்பு, ஜன. 6

வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் தேர்தல்கள் மார்ச் முதலாம் திகதிக்கும் 21ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் திஸநாயக்கா தெரிவித்தார்.

இவ்விரு மாகாண சபைகளையும் ஜனாதிபதி சந்திரிகா கலைத்திருந்தமை தெரிந்ததே. (இ-3)

# அகதிகளுக்கானநிவாரணம் படையினருக்கு செல்கிறது

## அரசு மீது குற்றச்சாட்டு

மணிலா, ஜன. 6

இலங்கையில் இடம் பெயர்ந்த மக்களுக்கென வெளிநாடுகள் வழங்கிய நிவாரணப் பொருள்களை ஸ்ரீலங்கா அரசு இராணுவத்துக்கு வழங்கி வருகிறது என ஸ்ரீலங்கா அரசு மீது குற்றம் சாட்டப்படுவதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

கப்பல்கள் மூலம் அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்கள் காங்கேசன்துறையில் இறக்கப்பட்டுள்ளன என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. (இ-3)

சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட

# தகவல் அனுப்பும் சேவை; செஞ்சிலுவை நிறுத்துகிறது

சாவகச்சேரி, ஜன. 6

இங்கு உள்ளவர்கள் வெளிநாடுகளில் தங்கியுள்ள தமது உறவினர்களுக்கு தமது சுக நலம் குறித்து தகவல் அனுப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்ட விசேட சேவையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இம்மமாத இறுதியுடன் நிறுத்த உள்ளது.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு யாழ். அதிகாரி ஜோர்ச் குன்ஸ் இதனைத் தெரிவித்தார்.

தகவல்களைப் பெற்று அனுப்புவதற்காக சாவகச்சேரி, பளை ஆகிய இடங்களில் இயங்கிய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உப அலுவலகங்கள் இம்மாத இறுதியுடன் செயற்படமாட்டா என்றும் அவர் தெரிவித்தார்.

சுகவீனம் மற்றும் மரணம் தொடர்பான அவசர செய்திகள் மட்டும் பருத்தித்துறை அலுவலகத்தில் வழமை போல் ஏற்கப்படும். (இ-3)


# 45ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி நிகழ்வின் அழைப்பும்

06 - 01 - 1996

யாழ். கட்டுவன் மேற்கைச் சேர்ந்த
கதிரேசு - மகேஸ்வரி தம்பதிகளின் வீரப்புதல்வன்
கணேந்திரன் அல்லது கண்ணன்
(2 ஆம் லெப்டினன்ட் வீரக்கோன்)
வலிகாமம் சூரியக்கதிர் போரிலே வீரசுவர்க்கம்
அடைந்தமை குறித்த

# 45 ஆம் நாள் நினைவலைகள்

தாய் மடித்தளிராக: 14-05-1975



தமிழ் மடிச்சுடராக: 23-11-1995

# 2ஆம் லெப்டினன்ட் வீரக்கோன்

(கிட்டு படையணி)

## (கண்ணன்)

செந்தமிழ் தாயகம் தீயிலே வெந்திடல்
எங்களின் முன்னிலே நிறைவுறலாகுமா
என்றவன் எழுந்தான் கண்ணிலே தாயகம் நேரில்
தோன்றிட கருத்தினில் சுதந்திரம் கருவாய் உதிர்த்திட
செந்தமிழ் தலைமகன் சீரிய தலைமையில்
வன்பகை வென்றிட செங்களம் புகுந்தான்
தன்னுயிர் தமிழுக்கு காவல் புரிந்திட தன்னுடல்
தமிழ் மண்ணில் உரமாய் சமைந்திட
வீரம் முழங்கியே களத்தினில் கதிர்வீசி உயிரையே
மண்ணுக்கு காணிக்கை யாக்கிவிட்டு
காவிய மகனாக தாய்மடி மீண்டான் நாம்
வாவென்று வரவேற்று வாய்விட்டு அழைத்தோம்
வந்தவன் வாய்மூடி வைரமாய் மௌனித்தான்
தன் பேச்சே தமிழ் மண்ணின் மேல்வீசும் தென்றலென்று
ஆம் அன்றுதான் நாமுணர்தோம் மாவீரன் அவனென்றும்
அவன் தமிழ் மனங்களின் மழலையென்றும்
மௌனமாய் இனி நாங்கள் மலர வைப்போம்
எங்கள் வீரமறவன் மங்காத புகழ் நினைவை.

சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள்

அனைவரையும் எம்முடன் இணைந்து மாவீரன் நினைவுகளை பகிர்ந்து கொள்ளுமாறும் இன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ மாவீரர்கள் ஆத்மா சாந்தியடைய எமது பிராத்தனைகள் ★

- குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:
மே/பா மு. பாலசிங்கம்.
ஜெனா சனசமூக நிலைய அருகில்,
ஜெனா வீதி, வரணி வடக்கு, வரணி.

(39805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

EN தொடர் இலக்க மொறிஸ் மைனர் கார் ஓடும் நிலையில் விற்பனைக்குண்டு. கைதடி கோப்பாய் வீதி, கைதடி மேற்கில் சு. சண்முகரத்தின சர்மாவுடன் தொடர்புகொள்ளவும்.
(39767)

6X4 அடி ஸ்ரீல் அலுமாரி விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. த. மனோகரன், 'திருக்குற்றாலம்' சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
(39799)

### வீடு தேவை

ஹோட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தாருக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. நல்ல முற்பணமும் வாடகையும் வழங்கப்படும். தொடர்பு: றொலெக்ஸ் ஹோட்டல், கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(39908)

### படிவங்கள்

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றப்பத்திரம், D. Form, மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பதற்கான பிரவேச விண்ணப்பப் படிவங்கள் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சோதி அச்சகம், மக்கள் கடை அருகாமை, கச்சாய் வீதி, சாவகச்சேரி,
(39910)

### காணவில்லை

மோட்டார் சைக்கிள் C70-த2 7406 நீலநிற எக்னோ பவர் யந்திர இல. 6508466, அடிச்சட்ட இல. 6274269 28-12-95இல் கைதடி கோப்பாய் வீதி, கைதடி மேற்கில் வசிக்கும் எனது வீட்டிலிருந்து காணவில்லை. இதுபற்றி தகவல் அறிந்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் சு. சண்முகரத்தின சர்மாவுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(39796)

### போத்தல் தேவை

ஹொர்லிக்ஸ், வீவா, ஜாம் போத்தல்கள் உள்ளவர்கள் அவற்றை கிரியோன் கூல் பார், ராஜேஸ்வரி ஸ்ரோஸ் (சாவகச்சேரி), வேலவன் ஸ்ரோஸ், செல்வராஜா ஸ்ரோஸ் (பருத்தித்துறை), சுபாஸ் பேக்கவுஸ், ரேஸ்ற் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட் (நெல்லியடி)யில் ஒப்படைக்கவும். பணத்தையும் பெற்றுக்கொள்ளவும்.
(சி-3090)

### தவறிவிட்டது

பாலசிங்கம் அன்னபூரணம், பிரிந்தினி ஆகியோரின் இலங்கை வங்கி சேமிப்பு புத்தகங்களும், அடையாள அட்டைகளும். பணமும் கைப்பையுடன் 4-1-96 மாலை நெல்லியடி கடை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பாலசிங்கம் மே/பா சிவஞானசுந்தரம், 'செல்வகிரி'. மாவடி வளவு, துன்னாலை வடக்கு.
(39803)

### மணப்பெண் தேவை

இலக்கினம் சிங்கம், நட்சத்திரம் பூசம், வயது 39, துபாயில் உதவிக்கணக்காளராக இருப்பவருக்கு கணக்கியற் துறையில் அல்லது கணணித் துறையில் போதிய தேர்ச்சியும், 30—36 வயதுமுள்ள அழகான இந்து மணப்பெண் தேவை. இல. 512, மே/பா உதயன், சரசாலை.
(39800)

### மணமகன் தேவை

38 வயதுடைய மாதம் ரூ. 5000/- வருமானம் பெறும் பட்டதாரி அரச ஆசிரியைக்கு மணமகன் தேவை. விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: இல. 511, மே/பா உதயன், சரசாலை.
(39786)

## நிவாரண பொருள்கள் வருகின்றன

வன்னிப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், கெயர் ஆகியநிறுவனங்கள் தற்போது பொருள்களை எடுத்து வருகின்றன.

கூரை விரிப்புகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள் உடுபுடைவைகள் ஆகிய பொருள்கள் தாண்டிக்குளம் ஊடாக தினமும் சுமார் 10 லொறிகள் கொண்ட வாகன அணியில் எடுத்துவரப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பொருள்கள் யாவும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் மேற்பார்வையில் இடம்பெயர்ந் தோருக்கு வழங்கப்படும்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் நவீன சந்தை உட்புறம்
இயங்கி வந்த எமது ஸ்தாபனமான
53 A, ரதி பன்சி கவுஸ்
இன்றுமுதல்
கீழ்வரும் முகவரிக்கு மாற்றப்பட்டு உள்ளது என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்

**ரதி பன்சி கவுஸ்**
**10, நவீன சந்தை உட்புறம் மேல்மாடி,**
**சாவகச்சேரி.**

(சி/2932)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாவகச்சேரி

## அறிவித்தல்

காணிக் கொள்வனவு

மேற்படி எமது சங்கம் பத்து பரப்பு அளவிலான காணியினை எமது சங்க எல்லைப் பரப்பினுள் கொள்வனவு செய்ய இருப்பதனால், விற்பனை செய்ய விரும்புவோர், காணியின் பெறுமதி, உறுதியின் பிரதி, வரைபடம் என்பவற்றுடன் நேரில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
(கண்டிவீதிக்கு அண்மையில் உள்ள காணி விரும்பத்தக்கது).

பொதுமுகாமையாளர்.
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி.

30. 12. 95 (சி/3011)

# மட்டக்களப்பில் மீண்டும் சுற்றிவளைப்பு, தேடுதல்

மட்டக்களப்பு, ஜன. 6

கடந்த புதன்கிழமை அதிகாலை மட்டக்களப்பு நகரை படையினர் சுற்றிவளைத்து வீடு வீடாகச் சோதனை நடத்தினர்.

நகருக்குள் பிரவேசிக்கும் கோட்டைமுனை பாலமும், புதிய பாலமும் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டு இத்தேடுதல் நடத்தப்பட்டது.

குடியிருப்பாளர் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்தோர் தவிர்ந்து வீடுகளில் மேலதிகமாக எவரும் உள்ளனரா? என இராணுவத்தினர் சோதனை செய்தனர்.

இதன் காரணமாக அரச அலுவலகங்கள், பாடசாலைகள் இயங்குவது தாமதமானது. பஸ் சேவையும் பாதிக்கப்பட்டது..

அதேவேளை — கடந்த சில தினங்களில் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சோதனை நிலையங்களில் கூடுதல் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சில வீதிகள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

(இ-3)

## கிழக்கில் விரைவில் தாக்குதலாம்

கொழும்பு, ஜன. 6

கிழக்கில் தமது தாக்குதல்களை விடுதலைப்புலிகள் தீவிரப்படுத்தி இருக்கையில்—

கிழக்கில் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை இராணுவம் விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

# ஆயிரம் தொன் மாவுடன் 'ஹபரண'10ஆந்திகதி வரும்

திருகோணமலையில் இருந்து ஆயிரம் மெற்றிக் தொன் மா மற்றும் நிவாரணப் பொருள்களுடன் ''ஹபரண'' கப்பல் எதிர்வரும் 10 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவிருக்கிறது.

தற்சமயம் திருகோணமலையில் தரித்துள்ள இக்கப்பலில் பொருள் ஏற்றும் வேலைகள் நாளை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச தொண்டர் அமைப்புக்களின் நிவாரணப் பணிகளுக்கு தேவையான பொருள்களும் இக்கப்பலில் எடுத்து வரப்படவிக்கின்றுறன. [உ-3]

# கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகள் முதலாம் தவணைக்காக கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டன.

ஆண்டு 5க்கு உட்பட்ட வகுப்புகளே ஆரம்பமான போதிலும், மாணவர்களின் வரவு மிகவும் குறைவாகவே இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் பெரும் எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனேகமான பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகள் பலவற்றில் இடம் பெயர்ந்தோர் இன்னும் தங்கி உள்ளனர்.

(இ-76)

## டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள்

சாவகச்சேரி, ஜன. 6

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சியில் தற்போது இயங்கும் வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோரின் 95 டிசம்பர் வவுச்சர்கள் இதுவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் யாழ்.செயலகத்தில் வைத்தே வழங்கப்பட்டு வந்தன.

தற்போது மீதி வவுச்சர்கள் அந்தந்த வங்கிகளுக்கே அனுப்பப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் இடம்பெயர்ந்த தத்தமது வங்கிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் செயலகக் கணக்காளர் (ஓய்வூதியம்) கோரியுள்ளார்.

மேலும் வடமராட்சிக்கு இடம்பெயர்ந்து இயங்குகின்ற வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதிய வவுச்சர்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்தே வழங்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## 'ஏபெக்' அமைப்பில் ஸ்ரீலங்கா

கொழும்பு, ஜன. 6

ஆசிய — பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பில் (''ஏபெக்'') இணைந்து கொள்ள ஸ்ரீலங்கா விண்ணப்பித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

''ஏபெக்'' அமைப்பில் இணைவதற்கு விண்ணப்பித்துள்ள முதலாவது 'சார்க்' நாடு ஸ்ரீலங்காவாகும்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகியவையும் ''ஏபெக்'' அமைப்பில் சேரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஹெலி நோட்டம்


செம்பியன்பற்று, ஜன. 6

வடமராட்சி கிழக்கில் நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்று கடல்பகுதியில் பறந்து குடியிருப்புக்களை நோட்டமிட்டது.

(இ-36)

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஆசிரியை
**திருமதி சாரதாதேவி இரத்தினேஸ்வரன்**
அவர்களின்

## நினைவு அஞ்சலி



காலவெள்ளச் சுழிப்பட்டுக் கதிகலங்கி நிலைபெயர்ந்து காலன் எறிகணையால் கருகிமறைந்திட்ட மெய்கண்டான் ஆசிரிய மலர்க்கொத்தில் ஒரு மலரே தெய்வந்துணையென்று தினமும் பணிந்த மலர் பணிவும் இன்சொல்லும் பக்தியும் நோன்புகளும் அணியான சாரதாதேவி எங்கள் சமயமலர் நடராசன் திருவடிக்கே அர்ப்பணமாய் அஞ்சலித்தோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம்,
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பழையமாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச்சபை.

இளவாலை மெய்கண்டார் ம. வி.
இளவாலை.
(39792)

## இடமாற்றம்

### மேர்வின்ஸ்

றபர் சீல், நம்பர் பிளேட், வீட்டுப்பெயர் தயாரிப்பாளர் — தற்போது கண்டிவீதி, சாவகச்சேரியில் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்பாக) இயங்குகிறது.
(39916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தில் பெரும் தாக்குதல் நடத்துவதற்கு புலிகள் முஸ்தீபு

## மன்னாரிலிருந்து படகுகளில் வருகின்றனராம்

கொழும்பு, ஜன. 6

கிழக்கு மாகாணத்தில் படையினரின் கவனம் திரும்பியிருப்பதை அடுத்து —

புத்தளம் மாவட்டத்தில் தொடராக பெரும் தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்துக்கு கிடைத்துள்ள தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.

பெரும்பாலும் பழைய புளியங்குளம், இளவங்குளம், கற்பிட்டி பகுதிகளிலேயே தாக்குதல்களை நடத்துவதற்கு புலிகள் திட்டமிட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இப்பகுதியில் உள்ள அடர்ந்த காடுகளிடையே சுமார் 300 விடுதலைப் புலிகள் நடமாடுவதாக இராணுவத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மன்னாரிலிருந்து படகுகளில் வரும் புலிகள் கற்பிட்டிக்கும் புத்தளத்துக்கும் இடையில் வந்து இறங்குவதாகக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்து, இப்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியன்று பழைய புளியங்குளத்தில் உள்ள பொலீஸ் காவலரண் புலிகளால் தாக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் ஆயுதப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. எனினும் இரண்டு நாள் கழித்து மீண்டும் அந்தக் காவலரண் விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டது.

இச்சம்பவங்களை அடுத்து அப்பகுதியில் குடியிருந்த மக்கள் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறிவிட்டனர்

- இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்தது. (உ)

# 50 பயணிகளுக்கு இடம் இருந்தும் 17பேர் மட்டுமே ஹபரணவில் வந்தனர்

## காங்கேசன் செல்ல தீவுப்பகுதி மக்கள் அச்சம்

சாவகச்சேரி, ஜன. 6

திருகோணமலையிலும் கொழும்பிலும் தங்கி உள்ள தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் 'ஹபரண' கப்பலில் காங்கேசன் துறை செல்ல அஞ்சுகின்றனர். நேரடியாக தீவுப் பகுதிக்குச் செல்லவே அவர்கள் விரும்புகின்றனர் என்று தெரியவருகிறது.

''ஜரிஷ் மோனா'' கப்பல் கடத்தல் சம்பவத்தை அடுத்து கடந்த சில மாதங்களாக தீவுப்பகுதிக்கான கப்பல் சேவை நடைபெறவில்லை. இதன் காரணத்தால் 400 பயணிகள் வரை திருகோணமலை மற்றும் கொழும்பு பகுதிகளில் தங்கி உள்ளனர். கப்பல் கடத்தச்சமபவத்துக்கு முன்னர் இவர்கள் பல்வேறு காரணங்களுக்காக கொழும்புக்கும் மற்றும் இடங்களுக்கும் சென்றவர்கள்.

இவர்களுக்கு உதவும் வகையில் 'ஹபரண' கப்பல் மூலம் ஒவ்வொரு தடவையும் 50 பயணிகள் வீதம் எட்டுத் தடவைகள் தீவுப்பகுதிக்கு சேவையை நடத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இணக்கம் தெரிவித்திருந்தது.

தீவுப்பகுதிப் பயணிகளை ஹபரண கப்பல் காங்கேசன்துறையில் இறக்கி விடும் என்றும் —

படையினர் வேறு பயண ஒழுங்குகள் மூலம் இவர்களை தீவுப்பகுதிக்கு அனுப்பி வைப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் கடந்த வாரம் முதலாவது சேவை திருகோணமலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இக்கப்பலில் செல்ல 17 பயணிகள் மட்டுமே முன்வந்தனர்.

ஆகவே மறு ஏற்பாடு வரை தீவுப்பகுதி பயணிகளுக்கான இக்கப்பல் சேவைடு நடைபெறமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# செஞ்சிலுவையினர் கொண்டு வந்தது புலிவீரரின் சடலம் அல்லவாம்!

## இறுதியில் அரச செலவில் அடக்கம்

மட்டக்களப்பு, ஜன. 6

வாழைச்சேனை ப. நோ. கூ. சங்க கட்டடத்துக்கு முன்பாக உள்ள பொலீஸ் காவலரண் முன்பாக கடந்த சனிக்கிழமை கிடந்த இளைஞனின் சடலம் விடுதலைப் புலிகள் உறுப்பினருடையது அல்ல என்று தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடந்த இச்சடலம் விடுதலைப் புலிகள் உறுப்பினரினது என்று பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி இச்சடலத்தைப் பொறுப்பேற்று விடுதலைப் புலிகளிடம் கையளிக்க கொண்டு சென்றார் என்றும் —

இச்சடலம் தங்களது உறுப்பினருடையது அல்ல என விடுதலைப் புலிகள் தெரிவித்தனர் என்றும் —

உரிமை கோரப்படாத இச்சடலத்தை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் மீண்டும் வாழைச்சேனைக்கு கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின் இச்சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டதாம். (இ 3)

# ஐயப்ப சுவாமி பக்தர்கள் இருவரை கரும்புலி என கைதுசெய்த பொலீஸார்

கொழும்பு, ஜன 6

கொள்ளுப்பிட்டியில் உள்ள இந்திய தூதரகத்துக்கு வீஸா பெறச் சென்ற இரு ஐயப்ப சுவாமி பக்தர்கள் கொள்ளுப்பிட்டி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

எதிர்வரும் தைப்பொங்கல் அன்று சபரி மலையில் நடைபெறும் மகரஜோதிபூசையில் கலந்து கொள்வதற்கு இந்தியா செல்ல வீஸா பெறவே இவர்கள் அங்கு சென்றிருந்தனர்.

தூதரகத்துக்கு வெளியே கறுப்பு உடை அணிந்த இருவர் நிற்பதைக் கண்ட பொலீஸார் கரும் புலிகள் வந்துள்ளார்கள் என்ற சந்தேகத்தில் அவர்களைக் கைது செய்தனர் என்றும்—

அவ்விருவரையும் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர் செய்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. கைதான இரு ஐயப்பசுவாமி பக்தர்களும் 9 அல்லது 10 வயது நிரம்பியவர்களே என்றும் தெரிவிக்கப்படுகிறது ஐயப்ப சுவாமி பக்தர்கள் கறுப்பு உடை அணிவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பாம்புக்கடி சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

மந்திகை, ஜன. 6

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தற்போது பாம்புக்கடிச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஐந்து நாட்களில் ஐந்து பேர் பாம்புக்கடிக்கிலக்காகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் இருவர் [illegible] ழந்துள்ளனர். ஒருவர் இன்னமும் ஆபத்தான நிலையில் இருந்து வருகிறார்.

இதேவேளை நேற்றும் ஒரு சிறுவன் பாம்புக்கடிக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கம்பர்மலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இராசேந்திரம் ரதிஸ்வரன் (வயது13) என்ற [சிறுவனே பாம்புக்கடிக்கு உள்ளானவர்] [illegible]. (இ-15)

# எழுதுவினைஞர் பதவி நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஜன. 6

அரசாங்க சேவையில் எழுதுவினைஞர் தரங்களில் உள்ள வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

1994 ஆம், 1995 ஆம் ஆண்டுகளில் எழுதுவினைஞர் தரத்துக்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் முடிவுகளின் அடிப்படையில் வைத்து இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

விண்ணப்பதாரர்கள் இரு நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டும்.

முதலாவது சுற்று நேர்முகப் பரீட்சை சம்பந்தமான விவரங்களை விண்ணப்பதாரர்களுக்கு கடிதம் மூலம் அறிவிப்பதற்கான ஒழுங்குகளை அமைச்சு ஏற்கனவே மேற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கல்வயலில் கசிப்பு

தென்மராட்சி, ஜன. 6

சாவகச்சேரி கல்வயல் வைரவர் கோவிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த நபர் ஒருவர் சாவகச்சேரி காவல் துறையினரிடம் பிடிபட்டார்.

இச்சம்பவம் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்றது.

உற்பத்தி செய்யப்பட்ட 35 லீற்றர் கோடா மற்றும் பாத்திரங்களுடன் கசிப்பு ஆகியவை காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டது. (இ-117)

# கிணற்றில் பெண்ணின் சடலம்

சாவகச்சேரி, ஜன. 6

மீசாலை வடக்கு வயல் கிணறு ஒன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் சாவகச்சேரி காவல்துறையினரால் நேற்று மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பிரஸ்தாப பெண் சுண்டுக்குளியைச் சேர்ந்தவர் என்றும் —

இவர் இடம்பெயர்ந்து மீசாலை வடக்கில் தங்கியிருந்தவர் என்றும் —

இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாரான இவரது கணவர் வெளிநாட்டில் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-13)

# உதயன்

## மனித கேடயம் மாறாது

ஸ்ரீலங்கா ஆயுதப்படைகள், தமக்கு விடுதலைப் புலிகளின் கையால் இழப்பு ஏற்படும் போது—

அதற்குப் பழிவாங்கும் விதத்தில் நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் பொதுமக்களைப் பலிகொள்வது வழக்கம்.

அதுபோலவே, விடுதலைப் புலிகளுடன் நேருக்குநேர் மோதத் திராணி, பலம் இல்லாத போது, தமிழ் மக்களை கேடயமாக வைத்துச் சண்டையிடுவதும், அவர்களைப் பலி கொடுப்பதும் சர்வ சாதாரணம்

யாழ்ப்பாணத்துக்கான போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பில், இராணுவத்தினர் தமிழ் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்திச் சண்டையிட்டு, பத்தொன்பது பேரை பலிகொடுத்த விவகாரம் இப்போது அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

அப்போது நடைமுறையில் இருந்த செய்தித் தணிக்கையைப் பயன்படுத்தி பத்தொன்பது பேரையும் விடுதலைப் புலிகளே சுட்டுக் கொன்றார்கள் என்று அரசு வேறு பொய்ப்பிரசாரம் செய்தது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். புதுக்குடியிருப்புச் சம்பவம் போல இராணுவம் தமிழ்ப் பொது மக்களைக் கேடயமாகப் பயன்படுத்திப் பலி கொடுத்த சம்பவங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

ஆனால் அரசு அவற்றை ஒப்புக்கொண்டதில்லை. அத்தகைய சம்பவங்கள் நடைபெறாது தடுப்பதில் அக்கறை காட்டியதும் இல்லை.

தமிழர்களைக் கொல்லும் போதும், அவர்களின் மரணத்துக்குக் காரணமாக இருக்கும் போதும், ஆயுதப் படையினர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கும், நீதிமன்ற நடவடிக்கைக்கும், தண்டனைக்கும் அப்பாற்பட்டவர்கள் ஆகிவிடுகிறார்கள் !

சரியாகச் சொல்வதானால் தமிழர் கொலையை அரசாங்கம் தூண்டி, அதற்கு ஆதரவாகவும், ஒத்தாசையாகவும் இருந்து வருகிறது!

தமிழர்களை இராணுவ அடக்குமுறைக்கும், சிங்கள ஆதிபத்தியத்துக்கும் கொழும்பு அரசுகள் உட்படுத்திக்கொண்டிருக்கும் வரை—

இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்படப்போவதில்லை.

இத்தகைய பின்புலத்தில்—

இராணுவம் ஆக்கிரமித்துள்ள வலிகாமம் பகுதிக்குச் சென்று மீளக்குடியமருமாறு சந்திரிகா தமிழ் மக்களைக் கேட்கிறார்; கெஞ்சுகிறார்.

விடுதலைப் புலிகள் வலிகாமத்தில் தொடர்ந்து நின்று தாக்குதல்களை நடத்திவரும் சூழ்நிலையில்—

இராணுவம் முற்றாக வெளியேறாத நிலையில்—

நாம் அங்கு சென்றால் என்ன நடக்கும் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள். நரபலி எடுக்கும் சிங்கத்தின் குகைக்குள் செல்ல நினைப்பார்களா?

தமிழர்களை அந்தளவுக்கு மடையர்கள் ஏமாந்தவர்கள், சொரணை இல்லாதவர்கள் என்று சந்திரிகா எடை போட்டிருக்கிறார்!

இந்தத் தவறுக்கான பதில் அவருக்கு விரைவில் தெரிய வரும். மக்களற்ற யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்ததால் உண்டான அரசியல் தோல்வி மோசமடைந்து மேலும் தோல்விகள் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்கிட்ணர் (மாயவர்) சிவகுமார்

மல்லாகம் காளிகோவிலடியைச் சேர்ந்த முத்துக்கிட்ணர் சிவகுமார் (குமார்) நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்கிட்ணர் (மாயவர்) — நேசபூபதி தம்பதிகளின் மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், அபிரா, அச்சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அற்புததேவன் (மாயவர்–அச்சு இயந்திர மெக்கானிக்), திருமதி இ. புனிதவதி, பரமானந்தன் (ஆனந்தன்), திருமதி வி. லோகேஸ்வரி, திருமதி ந. தெய்வானைப்பிள்ளை (றோசி), பூரணச்சந்திரா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு மட்டுவில் சிவன்கோயில் வீதியில் உள்ள அன்னாரின் தற்போதைய இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமானந்தன் (ஆனந்தன்)
(சகோதரன்)

சிவன்கோவில் வீதி,
மட்டுவில்.
(சி/3022)

## முருகேசு கந்தவனம்

இல. 95, சந்தனமாதா கோயில் வீதி, அரியாலையைச் சேர்ந்த முருகேசு கந்தவனம் 4-1-96 இல் காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், அமுதா, வனதா, கண்ணன், பாஸ்க்கரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவாஸ்க்கரன், வினித்தா ஆகியோரின் மாமனாரும், யுகன், தஞ்சிகா, ஜனனி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4-1-96 பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
அமுதா
(மகள்)

தற்போதைய முகவரி:
மே/பா க. மகேந்திரராஜா,
நாவற்காடு, வரணி
(39804)

## கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
### (இளைப்பாறிய - ஓய்வூதிய பகுதி பிரதம லிகிதர்)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள் 05 - 01 - 96 அன்று [வெள்ளிக்கிழமை] காலமாகிவிட்டார்.

அன்னார் அம்பிகாரத்தினத்தின் கணவரும், கருணைநாதன் (மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்), காலஞ்சென்ற சிறிதரன், அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வராசா, சபாரட்ணம் [சாவகச்சேரி], தங்கராசா, தங்கவடிவேலு, நாகலிங்கம், செல்வமாணிக்கம், செல்லத்துரை, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் செல்லத்துரை, சொக்கலிங்கம், ஐயாத்துரை திருமதி ஆறுமுக இரத்தினகாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஊறணி மயானத்தில் தகனம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. அரவிந்தன்
(மகன்)

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
(40061)

## செல்லப்பா இராசரத்தினம்

பருத்தித்துறை வீதி. இருபாலைச் சந்தியை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது வைரமுத்து அரிசி ஆலை அருகில், புலோலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசரத்தினம் அவர்கள் நேற்று (05-01-1996) காலமானார்.

இவர் பவளம்மாவின் அன்புக் கணவரும், இராசேஸ்வரி, இராசதுரை (லக்கி பான்சி கவுஸ், இருபாலை), வேதநாயகம் (பாப்பா அரிசி ஆலை, கோப்பாய்), கனகநாயகம் (கோடன் எஸ்டேற் உடப்புசல்லாவ), விஜேநாயகம், லக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம் (தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய்), சந்திராதேவி, அருளேஸ்வரி (உதவிக் கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம் - வலயம் II), இராஜலக்ஷ்மி, உதயகுமாரன் (ராசி பட்டுச்சோலை), குமரேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், தியாகராஜாவின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அவரது தற்போதைய வதிவிடத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. விஜேநாயகம் (மணி)
(மகன்)

தற்போதைய முகவரி:
திரு. வி. நடராசா,
(இளைப்பாறிய ஆசிரியர்),
கல்லூரி வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.
(39808)

# பஸ் கட்டணத்தை உயர்த்த கோரும் சிபார்சை அமைச்சரவை நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 6

பஸ் கட்டணங்களை 35சத வீதத்தினால் அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த சிபார்சை நாட்டு மக்களின் தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு ஏற்றுக் கொள்வதில்லை என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக தேசிய தகவல் நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தொடர்பு சாதன, உல்லாசத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி தற்போது அமுலில் உள்ள பஸ் கட்டணங்களை மீளாய்வு செய்வது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மத்திய வங்கியைச் சேர்ந்த திரு. தியசிங்க தலைமையில் குழு ஒன்றை அமைத்திருந்தார்.

இந்தக்குழு போக்குவரத்து சபை, தனியார் பஸ் கட்டணங்களை 35 சதவீதத்தால் அதிகரிக்க செய்திருந்த சிபார்சு அங்கீகாரத்துக்காக கடந்த புதன்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## ராஜினமா!

டோக்கியோ, ஜன 6

ஜப்பானியப் பிரதமர் கொமுஸி முரயாமா ததனது பதவியை நேற்று இரஜினாம செய்தார்.

இடைக்கால அரசின் பிரதமராக ருயிட்டோ நியமிக்கப்படலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

## விசர் நாய் கடித்து சிறுவன் மரணம்

மந்திகை, ஜன. 6

விசர் நாயினால் கடியுண்ட 8வயதுச் சிறுவன் ஒருவர் நேற்று மந்திகை அரசினர் வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன் இவரை விசர் நாய் கடித்ததாகவும் —

விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்து ஆஸ்பத்திரிகளில் அப்போது இருக்கவில்லை என்றும் —

நான்கு நாள்களுக்கு முன் நோய் கண்டதும் அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் தாயாரால் தெரிவிக்கப்பட்டது.

வியாபாரி மூலையைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் ரகு என்ற சிறுவனே மரணமானவராவார்.

இவருக்கு விசர் நாய்கடித்த தினம் அதே நாயினால் கடியுண்ட மற்றொரு 16 வயதுச் சிறுவன் மூன்று நாட்களுக்கு முன் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஒரு தடவைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி மேற்படி சங்கங்கள் ஊடாகவே மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக வடமாகாண கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரட்ணம் தெரிவித்தார்.

(இ-7)

## பருத்தித்துறை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே தரித்துள்தளாகவும் —

கொழும்புத் துறைமுகத்துக்குள் நிற்கும் 'லங்கா கல்யாணி' கப்பலில் கூட பொருள் ஏற்றும் பணி மந்த நிலையிலேயே நடப்பதாகவும் — தெரியவந்தது.

அதே வேளை — திருகோணமலையில் இருந்து 'ஹபரண' கப்பல் எதிர் வரும் 10 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## பழைய...

(1ஆம் பக்கத் தொடர்சி)

வீரவேங்கை ஓவியன் (சிறிபாலசிங்கம் தர்மபாலன் — கோண்டாவில்)

வீரவேங்கை அமுதன் (ஆறுமுகம் சிவகுமார் — உடுவில்)

வீரவேங்கை பொற்கோ (அருளம்பலம் விக்கினேஸ்வரன் — கச்சாய் தெற்கு) ஆகியோரே வீரமரணமடைந்தனர்.

(இ-3)

## எழுதுவினைஞர்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளது.

எழுதுவினைஞர் பரீட்சையில் ஆகக் குறைந்த கூட்டுப் புள்ளியைப் பெற்றவர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

மொத்தப்புள்ளி மாவட்ட அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

மன்னார் மாவட்டத்துக்கு முதல் குறைந்த தொகையான 117 மொத்தப் புள்ளிகளும், கொழும்பு மாவட்டத்துக்கு மிகக் கூடுதல் தொகையான 138 மொத்தப் புள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(இ-3)

## சிவசேனையின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்து சமயப் பேரவையின் தலைவர், சைவபரிபாலன சபையின் தலைவர், இந்து குருமார் ஒன்றியச் செயலாளர் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலை ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள இந்த மகஜரில் —

ஈழத்தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளமைக்கும் இலங்கை இராணுவம் தனது நடவடிக்கைகளைத் தொடருமானால் சிவசேனயும் மகாராஷ்டிர மக்களும்ஹர்த்தால் நடத்த தீர்மானித்துள்ளமைக்கும் — நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ விமானத் தாக்குதல்களாலும், ஷெல் வீச்சினாலும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான இந்துக்கோவில்கள் அழிக்கப்பட்டன.

★ வரலாற்றுப் பெருமை மிக்க திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், உகந்தை முருகன் கோவில் ஆகியவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு இந்துக்களின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

★ ஆலய உற்சவங்கள் நடைபெறும் போது விமானத் தாக்குதகளும், ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு கோயில்கள் சேதமாக்கப்பட்டதுடன் ஏராளமான பக்தர்களும அங்கேயே கொல்லப்பட்டனர்.

★ ஆயிரக் கணக்கான இந்து ஆலயங்கள் பூசையின்றி மூடிக் கிடக்கின்றன.

★ இதுவரை போரினால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இந்துக்களை இழந்துள்ளோம் —

இசூழ்நிலையில் இலங்கை வாழ் இந்துக்களைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு உலக இந்துக்களுக்கும், சிறப்பாக இந்திய இந்துக்களுக்கும், இந்து ஸ்தாபனங்களுக்கும் உண்டு.

மகஜரின் பிரதி பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானிக்கும் அனுப்பட்டுள்ளறு.

## யாழ்ப்பாணத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மோதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார் என்றும் —

காயமடைந்தவர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## தவறிவிட்டது

**பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை சுற்றா**டலில், வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடமைற்றியது தொடர்பான தஸ்தாவேஜுகளும். எமது ஓய்வூதியப் பதிவுப் புத்தகங்களும், பிங்க் கலர் பின்னல் பையுடன்28- 12- 95 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயதுசெய்து பருத்தித்துறை இத்திரா கபேயில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இராமலிங்கம் பரமசாமி

இமையாணன்,
உடுப்பிட்டி.
(சி/3021)

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பையா அன்னம்மா

காங்கேசன்துறை சந்தை வீதியைச் சேர்ந்த திருமதி தம்பையா அன்னம்மா 4-1-96 இல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

இறுதிக்கிரியைகள் அன்று முடிவடைந்து விட்டன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:-
த. சிவலிங்கம் (மகன்)
திருமதி த. செல்வரத்தினம் (மகள்)

தற்போதையமுகவரி:-
C/o செல்லத்துரை ரவிச்சந்திரன்
நாவற்காடு,
வரணி.
(39802)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற் லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 06-01-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org